மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பட்டது.

6. அறிவிப்புக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு.
பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/74) -ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/74).

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு பிச்சை யெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 48/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என நான் முன்மொழி கிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிகையில், கடந்த மூன் றாண்டுகளுக்கு மேல் இந்த அரசு தொழுநோயால் அல்லலுறும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக எடுத்துள்ள நட வடிக்கைகளைப் பற்றி இப்பேரவை நன்கு அறியும் என்பதை நான் எடுத்துக் கூற விழைகிறேன். 1971-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவன்று திரட்டிய

---

* 14-12-1974-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.